International Journal for Development of Science and Technology (IJDST)
Vol. 1, Issue 16, March 2021 PP.01-14
www.ijdst.com
ISSN: 2456-8503

# நாட்டுப்புறப் பாடல்களில் சமூகம் - ஓர் ஆய்வு

என்.மணிமேகலை, ஆராய்ச்சி அறிஞர், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்

முனைவர். எஸ்.கலைவாணி, உதவி பேராசிரியர் தமிழ் துறை , மதுரை சிவகாசி நாடர்ஸ் பயனியர் மீனாட்சி மகளிர் கல்லூரி , பூவந்தி, சிவகங்கை

**முன்னுரை**

ஓர் இனத்தின் சமூக பொருளாதார வாழ்வியல் சிந்தனைகளை சித்தரிப்பதில் நாட்டுப்புற இலக்கியங்கள் குறிப்பிடத்தக்க இடத்தை பெறுகின்றன காலம் காலமாக வழங்கி வரும் இவை நிகழ்காலத்தையும் எதிரொலிக்கின்றன எதிர்கால உருவாக்கத்திற்கு பெரிதும் பயன்படும் விலைமதிக்க ஒண்ணாத இறந்தகால மூலமாக அமைகின்றன என்பதை அறிந்தீர்கள் ''மானுட பண்பாட்டை கிராமிய பண்புகள் என்றும் (Folk culture) அறிவார்ந்த பண்பியல˙(Learned culture) என்றும் பக்கத்து பன்னெடுங்காலமாய் வழக்கிலுள்ளது''

''நாட்டுப்புற வாழ்க்கை நகர்ப்புற வாழ்க்கை என மக்கள் வாழும் இடத்தை அடிப்படையாக வைத்து வாழ்க்கையை இரண்டாகப் பிரிப்பர்'' நாட்டுப்புற வாழ்வியல் என்பதே நாட்டுப்புறம் இயல் என்று பிரித்து பார்த்தால் நாட்டுப்புறம் என்பது கிராமம் ஊரகம் என்றும் ,அங்கு வாழும் மக்கள் கிராம மக்கள் ஊர் மக்கள் என்றும் பொருள் தருகின்றது.

''இயல் யெனில் ஒன்றை குறித்த கருத்துக்களின் தொகுப்பாகும் நாட்டுப்புறத்தான் என்றால் பாமரன்'' எனவே நாட்டுப்புறத்தான் என்றழைக்கப்படும் கிராம மக்களின் வாழ்க்கையை பற்றி கருத்துக்கள் என்கின்ற நிலையில் நாட்டுப்புறவியல் என்பதே பொருத்தமாக அமைகிறது எனவே நாட்டுப்புறவியல் என்பதை கலைச்சொல்லாக்கம் கொள்ளலாம்.

**நாட்டுப்புறவியல்**

நாட்டுப்புறவியல் மக்களின் கலைகளையும் இலக்கியங்களையும் நம்பிக்கைகளையும் பற்றி அறிந்து கொள்ள மேலே நாட்டுப்புற இயல் ஆகும்.[1]

''நாட்டுப்புற இயல் ஆனது மனித சமுதாயம் எதை அனுபவித்தது எதை கட்டுவதோ எதை பயிற்சி பெற்றதோ அவற்றை குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையாகும் இவை அறிவியல் அறிவின் இன்றும் வேறுபட்டன நாட்டுப்புற இயலின் வேர்கள் மனித சமுதாயத்தில் மிக ஆழமாக பரவி உள்ளனர் பண்பாட்டின் உயர்நிலையை களையும் அடைந்துள்ளன நாட்டுப்புற இயலின் அறிவு என்பது மனித அறிவின் கிளையாகும் அறிவியல் அடிப்படையில் தொகுப்பாகும் அறிவியல் அடிப்படையில் துவைப்பதும் பகுபதம் கற்பதும் தான் நாட்டுப்புற இயலின் கூறுகள் ஆகும் காலம் வரும் மனித வாழ்வையும் பண்பாட்டையும் அறிந்து கொள்வதாகும் அடுத்து நாட்டுப்புற இயல் ஐ போன் என்றழைக்கின்றனர் இச்சொல்லை 1846 ல் தான் வில்லியம் தாமசு என்பவர் முதன் முதலில் பயன்படுத்தினார் அதற்கு முன்னர் இதற்கு பதிலாக 'Popular antiquities' அல்லது 'Popular literature' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இச்சொர்கலில் நாட்டுப்புற இயலை பற்றிய முழுமையான பொருள் விளக்கம் இல்லை. எனவே தான் இச்சொற்கள் கைவிடப்பட்டு ''Folklore'' என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.[3]

''நாட்டுப்புற பண்பாட்டியல் என்பது கிராம மக்களின் அனுபவத்தின் பொக்கிஷம். மனிதரோடு மனிதனை அது நேரடியாக மட்டுமல்லாது இதயத்தோடு இதயத்தை இணைந்து வைக்கின்றது. அவர்களுடைய தனித்தன்மையை குலைக்காமல் ஒற்றுமையே வளர்க்கிறது இயற்கையோடு இயைந்து வாழும் சமூகத்தின் ஒட்டு மொத்தமான அல்லது

தனிப்பட்ட உணர்ச்சிகளை அது பிரதிபலிக்கின்றது. நாட்டுப்புற இயல் என்பது உயிரோடு உள்ள புதை வடிவம் (Lively fossil) அது மரணமடைய மறுப்பது மனித சமுதாயத்தின் லட்சக்கணக்கான ஆண்டு வாழ்வின் அனுபவங்களின் பண்பாட்டின் அறிவியலின் படிவங்கள்.''[5]

கிராம மக்களே ஆண்டவனின் பூரண அருள் பெற்றவர்கள் அவர்கள் இதயம் மென்மையானது மனம் தூய்மையானது வாக்கு உண்மையானது. அவர்கள் இருப்பிடமும் பசுமையானது உடல் வலிமையனது பேச்சுக்கள் இனிமையானவை பழகும் தன்மை வெளியானது. கைகள் நேர்மையானவை காதுகள் கூர்மையானவை கண்கள் ஒளிமயமானவை.

### FOLK-LORE

FOLK-LORE - என்னும் இரு சொற்கள் கொண்டு ''Folk-lore'' என்ற தொடர் உருவாக்கப்பட்டது.[2]

### Folk:

இச்சொல்லுக்கு அகராதிகள் மக்கள் (People), நாடு (Nation) இனம் (race) என்ற பொருளைத் தருகின்றன. சாதாரணமாக பன்மையில் கையாளும் போது ஒரு குறிப்பிட்ட குழு அல்லது பிரிவைச் சேர்ந்த மக்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

### Lore:

''இச்சொல்லுக்கு அகராதி கற்றறிவு சிறப்பாக பழங்காலத்திலிருந்து வழிவழியாக வழங்கி வருவது அல்லது ஒரு பிரிவு மக்களின் உடைமை'ஹ என்று பொருள் கூறுகின்றது.''[6]

''அகராதி அடிப்படையில் நோக்கினால் "Folk" "Lore" என்ற சொற்கள் மக்களிடையே மக்களுடைய அல்லது நாட்டினுடைய அல்லது ஒரு இனத்தினுடைய கற்றல் மட்டுமே அறிவு சிறப்பாக பழங்காலத்திலிருந்து வழிவழியாக வழங்கி வருவது என்று பொருள் தருகின்றன''[6].

''நாட்டுப்புறம் என்ற சொல் கழடம டழசந என்பதற்குரிய பொருளைத் தரவில்லை. எனவே அது குறையுடைய என்பது உலக உண்மையே ஆனாலும் ஒரு குறையுடைய சொல்லுக்கு நாட்டுப்புறம் என்ற மற்றொரு குறையுடைய சொல்லை பயன்படுத்துவது சரியல்ல. அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க பொருத்தமான வேறு சொல் கிடைக்கும்வரை பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நாட்டுப்புறம் என்ற சொல்லைப் பயன்படுத்துவது தவறாகாது.''[7]

### நாட்டுப்புறவியல் விளக்கம்:

ஒரு மக்கள் குழுவினரிடையே வழங்கிவரும் அல்லது வழங்கி வந்த பாடல்கள் கதைகள் பழமரபுக் கதைகள் தொன்மங்கள் பழமொழிகள் புதிர்கள் நகைகள் முதலான இலக்கியங்கள் கரகாட்டம் காவடியாட்டம் தெருக்கூத்து முதலான நிகழ்த்து கலைகள் ஓவியம் மரச் சிற்பம் சுதை சிற்பம் முதலான பொருட்கள் பாய் முடைதல் பொம்மை செய்தல் முதலான கைவினைப்பொருட்கள் வழிபாடு நம்பிக்கைகள் சடங்குகள் சமய பழக்க வழக்கங்கள் வானியல் வானிலையியல் கடலியல் வேளாண்மை கட்டிடம் கட்டுதல் படகு கட்டுதல் மருத்துவம் முதலான அறிவியல் போன்ற வழக்குகளை முறைப்படி சேகரித்து வகைப்படுத்தி அறிவியல்பூர்வமாக ஆராயும் ஆய்வுத் துறையை நாட்டுப்புறவியல் துறை,,[8] என்பார் ஆறு. ராமநாதன்.

### நாட்டுப்புற இலக்கியம்

''நாட்டுப்புற இலக்கியங்கள் எங்கு தோன்றின எப்போது தோன்றின என்று யாரும் எளிதில் கூறிவிட முடியாது மனிதன் என்று தோன்றினானோ அன்றே இந்த இலக்கியங்களும் தோன்றியிருக்க வேண்டும் அவை எழுத்து வடிவம் பெறாமல் வந்திருக்கலாம் ஆனால் அக்கால மக்களின் உணர்வுகள் செயல் அமைப்பில் வெளிப்பட்டிருக்கும் என்பது மறக்க முடியாத மறுக்க முடியாத உண்மை[1],,

எழுத்து இலக்கியங்கள் காலத்தை காட்டும் கண்ணாடி என்றால் நாட்டுப்புற இலக்கியங்கள் சமுதாயத்தை காட்டும் கண்ணாடியாகும்

''நாடோடி இலக்கியம் என்பது மக்களின் வாழ்க்கையில் பிணைந்திருக்கும் இன்ப துன்பங்களை சித்தரிக்கும் வகையில் எளிய நடையில் அமைந்துள்ள இலக்கியமாகும், பெரும்பாலும் இரண்டடிகளாக இணைந்த கண்ணிகளால் கேட்போருக்கும் சொல்லோருக்கும் எளிமையில் பொருள் விளங்கி மனதிற்கும் பொருளாவது, மனதில் நிலைத்து இடம்பெறுவது, வழிநடைச் செல்வோரும் வழி நடையில் செல்வோரும் வருந்தி உழைப்போம் தமிழ் நடையில் தளர்வு உழைப்பில் சோர்வும் தோன்றாது இருக்கும் வகையில் கூடிக்கூடி பாடிப்பாடி பண்பு நலம் வாய்ந்தது.[2]

''வாய்மொழி இலக்கியம் உலகப் பொதுவானது. எல்லா மக்களும் தங்களுக்கென தனியாக வாய்மொழி இலக்கியத்தை பெற்றிருக்கின்றனர் வாய்மொழி இலக்கியம் உலக பொதுமை அல்லாத எழுதப்பட்ட இலக்கியத்தோடு முரண்பாடானது,,[3] என்பார் ஆலண்டண்டி.

நாட்டுப்புற இலக்கியங்கள் பாமர மக்களால் உருவாக்கப்பட்டு அவர்களாலேயே காப்பாற்றப்பட்டு வருபவர்கள் ஆகும் அவைகளைப் பெறாத இனமோ மொழியோ உலகில் இல்லை எனலாம் அவை வாய்மொழியாக தந்தை வழி தந்தை வழி மகனுக்கு என்ற பரம்பரை மரபுபடி வளர்ந்து நிலைபெற்றன வாய்மொழி இலக்கியமே,, மற்ற அனைத்து வகையான இலக்கியங்களுக்கும் மூலம் என்கிறார் அறவாணன்,[4]

``நாட்டுப்புற இலக்கியங்கள் பலரது கூட்டு படைப்பாக அமைந்தும் வழிவழியாக கையளிக்கப்படும் என இலக்கண வரையறுக்கப் உட்படாமல் வாய்மொழி வழக்கானதாகவும் படைத்தவர் பெயர் தெரியாததாகவும் அச்சிடப்படாமலும் எழுதப்படாமலும் உள்ளது,,[5] என்கிறார் குணசேகரன். இதனால் நாட்டுப்புற இலக்கியங்கள் மிகுதியான சமுதாய செய்திகளை வெளிப்படுத்தக் கூடியதாக உள்ளன ஏட்டிலக்கியத்திற்கும் இலக்கியத்திற்கும் நாட்டுப்புற இலக்கியத்திற்கும் உள்ள வேறுபாடுகள் குறித்து ஆறு ராமநாதன் கூறும் கருத்து இது. ஏட்டிலக்கியக்கங்கள் கல்வியறிவு பெற்ற மனிதர்களால் படைக்கப்படுகின்றன, பெரும்பாலும் தனிமனிதர்கள் ஆட்சியாளர்களையும் செல்வந்தர்களையும் சார்ந்த வாழ்க்கை நடத்துபவர்கள் எனவே அவர்களால் படைக்கப்படும் சமுதாயத்தின் வாழ்க்கை முறைகளையும் லட்சியங்களையும் பிரதிபலிக்கும்

நாட்டுப்புற இலக்கியங்கள்,எழுத்தறிவில்லாத கிராமப்புற உழைக்கும் மக்களின் கூட்டு படைப்புகளாகும் இவை சில நேரங்களில் தனி மனிதர்களால் அழைக்கப்பட்டாலும் கூட வாய்மொழியாக பரவும்போது பலருடைய எண்ணங்களையும் கருத்துகளையும் ஏற்பதன் வாயிலாக கூட்டு படைப்புகள் ஆகிவிடுகின்றன. இவ்விலக்கியங்கள் மக்களின் அன்றாட வாழ்வில் பங்கு பெறும் உயர் இலக்கியங்களாக திகழ்வதோடு அவர்களின் வாழ்க்கை முறைகளையும் ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்தவும் செய்கின்றனர்.,[6] எனவே நாட்டுப்புற இலக்கியங்களை புறக்கணித்துவிட்டு செய்யும் ஆய்வு முழுமை பெறாது நாட்டுப்புற இயலில் இலக்கியமும் ஒரு பிரிவாகும் நாட்டுப்புற இலக்கியத்தை

1. நாட்டுப்புற பாடல்கள்
2. நாட்டுப்புற கதைகள்
3. பழமொழிகள்
4. விடுகதைகள்
5. கதைப் பாடல்கள்

என பிரித்து ஆராயலாம் என்கிறார் சு.சண்முகசுந்தரம்ஹஹ[7]

நாட்டுப்புறப் வாய்மொழி இலக்கியங்களை பாடல்கள் கதைகள் பழமொழிகள் விடுகதைகள் கதைப் பாடல்கள் புராணங்கள் என பிரிக்கலாம்.

**நாட்டுப்புறப் பாடல்கள்**

''ஒவ்வொரு மொழியிலும் எழுத்து தோன்றுவதற்கு முன்பு பாடல்களும் கதைகளும் தோன்றத் தொடங்கின நாட்டுப்புறப் பாடல்களை இயற்கை பாடல்கள்யெனலாம் என்று பிறந்தவை எவரால் பிறந்தவை என்று எடுத்துச் சொல்ல

இயலாபண்பும் பாங்கும் பெற்றவை''[8] எனவேதான் நாட்டுப்புறப் பாடல்களுக்கு தாமதமாகவே மலர்ந்து மணம் வீசும் காற்று மலர்களையும் மலையினின்று விழும் அருவியை ஒப்பிடுவர்''

''இத்தகு நாட்டுப்புறப்பாடல்கள் உணர்ச்சி ஓசை இன்பம் தாலாட்டு சொல் தொடை நயம் நிறைந்தவை இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தும் மக்களின் உள்ளக் கிளர்ச்சிகளை வெளியிடும் தன்மை வாய்ந்தவை நாட்டுப்புற மக்களின் ஆசை நம்பிக்கை கனவு காதல் ஆகிய எல்லாவற்றையும் அவை பொன்னொளி வீசிப் போற்றுகின்றன,,[9]

''அதனால் தான் இப்பாடல்கள் யாவும் மனித வாழ்வின் தொடக்கம் முதல் இறுதி வரையான அனைத்து நிகழ்வுகளையும் பொருளாக கொண்டுள்ளன''[10]

''நாட்டுப்புறப்பாடல்களின் முழுமைபெறும் அதன் கவிதை அனைத்திலும் இசை இன்பத்திலும் பொதிந்துள்ளது ஏனெனில் அவைகள் இரண்டும் இன்றியமையாதவை ஒன்றுக்கொன்று துணை புரிபவை பண்ணோடு பாட படாத நாட்டுப்புறப்பாடல்கள் சிறகில்லாத பறவைகள் போன்றவை அவற்றை பண்ணோடு பாடும் பொழுது பறவை சிறகை விரித்து பறந்து விண்ணிலே உயர உயர கிளம்புவது போல் இருக்கும்''[11] என நாட்டுப்புறப்பாடல் ஆராய்ச்சி கவிஞர் சத்யார்த்தி கூறுகிறார். ''நாட்டுப்புறப் பாடல்களுக்கு பல்வேறு பெயர்கள் சூட்டப்பட்டன''[12] ஆனால் நாட்டுப்புறப்பாடல்கள் என்பதே வழக்காக உள்ளது நாட்டுப்புறப் பாடல்கள் அந்தந்த வட்டார பேச்சு மொழியில் அமைந்துள்ளது எனவே எளிதில் அனைவருக்கும் புரியும்படியாக உள்ளது எதுகையும் மோனையும் அதிகமாக இருக்கிறது நாட்டுப்புற பாடல் மண்ணின் ஈரம் மனம் கவர பாடப் பெறுவது பல்வேறு வகையில் கூறப்படும் வாழும் மண்ணின் மீதும் வழங்கும் மொழியின் மீதும் கொண்டுள்ள அன்பின் ஆழத்தை பாடல்கள் வெளிப்படுத்தியிருக்கும் மண்ணின் ஈரப்மனத்தை விளக்குவதால் போலவே வாழும் மண் மீதும் பற்று நாட்டுப்புற பாடல்கள் தன் நாடு தன்னினம் என்று பிரித்துப் பார்த்து பற்றுக் கொள்வதும் பாராட்டுவதும் உலகு தழுவிய பார்வையில் குறுகிய நோக்கமாய் தோன்றினாலும் ஒரு குறிப்பிட்ட இனத்தாரின் தனிப்பட்ட பண்பாட்டை நம்பிக்கையை கலை உணர்வுகளை வெளிப்படுத்தும் கருவியாக நாட்டுப்புற பாடல் செயல்படுவதை நாம் உணரலாம்.

''நாட்டுப்புறம் என்பது கிராமமும் கிராமியம் சார்ந்த இடங்களும் ஆகும் இவ்விடங்களில் பாடப்பட்டு வருகின்ற பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்கள் எனலாம்''[13] என்கிறார் .சு.சண்முகசுந்தரம் நாட்டுப்புறப் பாடல்களின் உள்ளடக்கம் பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கி கொண்டுள்ளன.

''நாட்டுப்புறப் பாடல்கள் கிராமப்புற வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புள்ளவை கதை பாடல்கள் தவிர மற்ற பாடல்கள் நாட்டுப்புற வாழ்க்கையின் அன்றாட சம்பவங்களையே பொருளாகக் கொண்டவை இதனால் தான் வாழ்க்கையின் சாதாரண சம்பவங்களாக பிறப்பு குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் விளையாட்டுகள் காதல் குடும்ப விவகாரங்களில் பஞ்சம் கிராம தேவதைகள் முதலியன நாட்டுப் பாடல்களின் பொருளாக அமைந்துள்ளன''[14] என்கிறார் நா.வானமாமலை.

நாட்டுப்புறப் பாடல்களின் தன்மையை பற்றி சு.சண்முகசுந்தரம் மேலும் கூறுகையில் ''நாட்டுப்புறத்து மக்களால் அன்றாடம் நம் வாழ்வில் ஒவ்வொரு காலகட்டத்திலும் தொட்டில் முதல் சுடுகாடு வரை இன்பம் துன்பம் ஏக்கம் ஏமாற்றம் என்ற அனைத்து உணர்ச்சிகளும் குழந்தை தன்மை இளமை முதுமை என்ற எந்த பேதமும் இல்லாமல் பாடப்படும் பாடல்களை நாட்டுப்புற பாடல் ஆகும் என்கிறார்''[15]

சங்ககால பாடல்கள் வாய்மொழியாக நாட்டுப்புற பாடல்களாக வழங்கி வந்த பிறகே ஏட்டில் எழுதப் பட்டது என்பதை கைலாசபதி சங்கச் சான்றோர் செய்யுட்கள் தொடக்கத்தில் வாய் மொழி வாயிலாகவே பிறந்தது வளர்ந்தது இருத்தல் வேண்டும் என்பது பல காரணங்களால் உறுதிப்படுகின்றது. சான்றோர் செய்யுட்களில் பாடலை குளிக்கும் போதெல்லாம் அதை வாயால் பற்றி எழுதப்படும் என்று குறிப்பிடாமல் முதற்கண் அவதானிக்கத்தக்கது.''[16]

ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை பண்பாட்டை வரலாற்றை பழக்கவழக்கங்களை உண்மையான முறையில் படம் பிடித்து காட்டும் நாட்டுப்புறப் பாடல்களே ஆகும்''[17]

நாட்டுப்புறப்பாடல்கள் மக்களில் இன்றளவும் பாடப்பட்டு வருகின்றன களப்பணிமூலம் சேகரிக்கப்பட்ட பாடல்கள் கீழ்கண்டவாறு வகைப்படுத்தப் பட்டுள்ளன.

1. தாலாட்டு பாடல்கள்
2.தொழில் பாடல்கள்
3.ஒப்பாரிப் பாடல்கள்
4.மற்றயவை

**தாலாட்டு**

குழந்தைச் செல்வமே பெருஞ்செல்வம் என்று மக்கள் நினைப்பதால் ஒரு பெண் திருமணத்திற்கு பிறகு தாய்மைப் பேற்றை விரும்புகிறாள் குழந்தை வேண்டும் என்பதற்காக தவமிருந்து பெற்ற தாலாட்டு மூலம் உணர்த்தும் பாடல்

''சீரங்கம் ஆடி திருப்பாற் கடலாடி
மாமன் மாமாங்கமாடி மதுரை கடலாடி
தைப்பூசமாடி தவமிருந்து வந்தவனோ''[18]

குழந்தைப்பேறு அவ்வளவு சிறப்பாக கருதப்படுகிறது.

அழும் குழந்தையை தூங்க வைக்க

''அத்தை அடித்தாளோ அரவணைக்கும் கையாலே
பாட்டி அடித்தாளோ பாலூட்டும் சங்காளே
மாமன் அடிச்சாரோ மல்லிகைப்பூச் செண்டாளே
அக்கா அடிச்சாலோ அமுதூட்டும் கையாலே
அடித்தாரைச் சொல்லி அழு ஆக்கினைகள்
செய்துவைப்போம்
வெண்ணையில் விலங்கு பண்ணி வெயிலிலே
போட்டியிடுவோம்
மண்ணாலே விலங்கு பண்ணி
தண்ணீரில் போட்டியிடுவோம்
காகிதத்தால் விலங்கு பண்ணி
காவிரியில் போற்றிடுவோம்''[19]

என்று பாடுகிறார். இதில் சொல்லப்படும் விலங்குகள் அனைத்தும் போடுவதற்கு முன் கரைந்துவிடும் தண்டனை தருவது போல் ஆறுதல் கூறி சுற்றி உள்ளவர்களையும் புண்படுத்தாமல் மேலும் சிந்திக்க வைப்பதாக இருக்கிறது

மற்றும் தாலாட்டு பாடல்,

ஆராரோ ஆரிரரோ எங்க கண்ணே ஆராரோ ஆரிரரோ
மல்லிகை மொட்டு போல
உங்க அம்மா வயித்துல மலர்ந்தின்க
செண்பகம் முல்லை போல செவ்வந்தியே
உங்க அம்மா வைத்துள்ள தங்கத்தால ஏனகட்டி''[20]

இந்த பாடலை பாடுபவள் தன் குடும்பம் வறுமையில் இருந்தாலும் குழந்தைக்கு தங்கம் மற்றும் வெள்ளியில் தூளி கட்டி ஆட சொல்லி பாடும் பாடலாக இருக்கிறது

**தொழிற்பாடல்கள்**

நாத்து நடும் போது பாடும் பாடல்
நாத்து நட போகையிலே
நானும் வாரேன் சீமையிலே
காத்தடிச்சா கலங்குதடி
கருத்த மச்சான் நானும் வரேன்''[21]

**உமும் போது பாடும் பாடல்கள்**

''சேதப்படுத்தி செவக்காளை ரெண்டு பூட்டி
செந்நெல் விளை வைக்க சேர்த்து
வைத்து நட்டு வச்சேன்''[22]

**கொண்டாட்ட பாடல்கள்**

மணமக்களை வாழ்த்த இயற்கையான மரங்கள் செடிகொடிகளை கொண்டே வாழ்த்துவது வழக்கமாக உள்ளது

''ஆல் போல் தழைத்து அருகு போல் வேரோடி

மூங்கில் போல் மகிழ்ச்சியோடு வாழனும்''[23]

இதில் ஆலமரம் விழுதுகள் கொண்டு நிற்கிறது அருகில் தான் வளர்ந்த இடத்திலேயே கீழே வேர் படர்ந்து அங்கங்கே அருகும் முளைத்து வரும் மூங்கில் தன்கீழ் சந்ததிகளை வளர்த்துக் கொண்டே இருக்கும் இப்படி தான் வாழ்க்கை அமைய வேண்டும் என்று வாழ்த்துவார்கள்.

''தாயிட தந்தையிட, தந்தையிட
சீரிட செனத்தியிட, செனத்தியிட
செல்ல பொண்ணா, நல்லா இருக்கணும்''[24]

இது பெண்கள் புகுந்த வீட்டில் நன்றாக இருக்கவேண்டும் என்று வாழ்த்துவது பிராமணர் வீடுகளில் பொங்கல் தினத்தன்று மாலையோ அதன் மறுநாள் காலையோ நல்ல நாளில் நல்ல நேரத்தில் பொங்கல் பானைகளில் கட்டிய மஞ்சளை எடுத்து வீட்டில் உள்ள சிறியவர்கள் நெற்றியில் பெரியவர்கள் தேய்த்து இந்தப் பாடல் பாடுவது இன்றும் வழக்கிலுள்ளது.

**மாமன் சீர்**

''கைக்கு காப்பாம் கரணக் கொலுசாம்

விரலுக்கு மோதிரமாம், விதவிதமாய் தோடுக்களாம்

சரம்சரமாய் சங்கீலியாம், சிவப்பு கல்லு அட்டிகையாம்

இடுப்புக்கு ஒட்டியாணம் இதுக்கு மேல என்ன வேணும்

பச்சரிசி பத்து கலம் பருப்பு யெட்டு கலம்
சுண்ணாம்பு சூலை யோட பத்து படி பானைகள்
பரன் ஓட….''[25]

இப்படி நீண்டுகொண்டே போகிறது மாமன் தன் மகளுக்கு சீர் செய்யும் வழக்கம் உள்ளதை அறியலாம் மேலும் பொருள்சார் பண்பாட்டில் அணிகலன்கள் உணவுப் பொருட்கள் அதன் அளவுகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம்.

**மசக்கை பாட்டு**

கருத்தரித்த 30ஆம் நாள் உப்பில்லா வாந்தி ஒக்காளம் கொண்டவள் ஆனால் அது கண்ட மாமியாரும் அகமகிழ்ந்த சம்பந்தி ஓலை அனுப்பினார் தாயாரும் ஓடிபோய் ஆப்பிள் ஆரஞ்சு திராட்சை பழங்களை வாங்கி வந்தாள் பைங்கிளி மார்க்கு தாயாரை கண்டவுடன் தலைமறைவாக வெட்கப்பட்டு ஓடியவள் மறைவாக நின்றால் அது கண்ட மாமியாரும் அங்கம் குறித்து சம்பந்தி வரவேற்க சடுதியில் வந்தால் நாலு மாதம் முடிந்தவுடன் பயமா இருக்கு என்னை போன்று கொடுத்தார்கள் ஐந்தாம் மாதம் ஆனவுடன் மசக்கை தெளிந்து முகம் வெலுத்து இடைவெளி இருந்தால் அருள் அவர் வேண்டிய பொருட்களை ஒரு பாடல் பட்டியலிடுகிறது.

''ஏட்டோட தயிர் வேணும்
உப்பு இஞ்சி வேணும்
கொத்தோட மாங்காயையும்
தேங்காயையும் வேணும்
சுடச்சுட தோசை வேணும்
சுண்டைக்காய் வேணும்
சுடச்சுட அதிரசம் அப்பளம்
வடாம் எலுமிச்சங்காய் புளி
இஞ்சி வேணும் சுத்து முறுக்கு
தேன்குழல் வேணும்
இட்லியும் சட்னியும்
கார வடை மசால் வடை
கனமாக வேண்டும்''

என்று தொடங்கி அந்தப் பெண் பத்தாவது மாதம் குழந்தை பெற்றோடுத்த் வரை இந்த பாடல் கூறுகிறது பத்து மாதம் ஆனவுடன் பைங்கிளிகள் விட்டுவிட்டு இடத்திலிருந்து இடுப்பு வலி தாளாமல் முத்து முத்தாய் வெற்றிவேற்கை பாலன் பிறந்தார் இப்படி பத்து மாதம் குழந்தையை வயிற்றில் சுமக்கும் பெண்ணின் தேவைகள் அவளை சுற்றியுள்ளவர்களின் செயல்கள் பத்து மாதமும் செய்யும் சடங்குகள் அவற்றுக்கான சீர்வரிசைகள் இந்த பாடல் மூலம் தெளிவாகிறது.

''குழந்தை பிறப்பு மாலை சுற்றி பிறந்தால்
மாமனுக்கு ஆகாது கொடி சுற்றி பிறந்தால்

கூட பிறந்தவனுக்கு ஆகாது - என்று குழந்தை பிறப்பு பற்றி கூறுகிறது கொடி சுற்றிப் பிறக்கும் குழந்தையை எண்ணெயில் முகம் பார்க்க செய்தால் தோஷம் நீங்கும் என்று நம்புகின்றனர்.

மேலும் தலைச்சன் பெத்த சமத்து பொண்ணு இது முதல் குழந்தை பெண்ணாக பிறந்ததால் விரைவில் வீட்டில் பல நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும் என்பதால் முதல் குழந்தை பெண் குழந்தையாக இருக்க வேண்டும் என்பார்கள்.

இதற்கும் ஆறுதலாகவும் பாடல்கள் உள்ளன

''தள பிள்ளை ஆண் பிள்ளை
தகப்பன் பிள்ளை மறுப்பில்லை
பெண் பிள்ளை மாதா பெயர் பிள்ளை
தாய் தந்தையின் பெயர் சொல்ல ஆண்-பெண்

இரு குழந்தைகளும் வேண்டும் என்பதற்கு இந்த பாடல் உதாரணம்.

**ஒப்பாரி**

கணவன் இறந்து கிடக்கிறான் ஆளும் மனைவியை அவள் அருகில் இருப்பவர்கள் தேடுகிறார்கள்.

அவர்களுடைய நடக்கும் வாக்குவாதம்…….
ஒப்பாரி…..

''அடியே அதோ பந்தலிலே பாவக்காய்!
அவர் திரும்பி வந்த பாத்துக்கலாம்
புடலங்காயும் தொங்குதடி
புண்ணியவான் திரும்பி வந்தா பாத்துக்கலாம்!.......

இப்படியே போகிறது பாட்டு அவளை தேடுபவர்கள் எந்த பொருளை சொல்கிறார்களோ அதற்கு ஏற்றார்போல் இறந்து கிடக்கும் கணவனை உயர்த்தி பாடி அடிபட்டவர் திரும்பி வந்தால்தான் என் மனம் அவற்றையெல்லாம் நாடும் என்பதுபோல் பாடுகிறாள்.

**கண்ணேறு கழித்தல்**

''வீட்டில் உள்ள பெரியவர் ஒருவர் தன் கையில் உப்பு மிளகு மிளகாய் மஞ்சள் போன்ற பொருள்களை எடுத்துக் கொண்டு வீட்டில் உள்ள மற்றவர்கள் சேர்ந்து நிறுத்தி வைத்து கையை மூன்று முறை அவர்களை சுற்றி இந்த பாடலை பாடுவார்..

''முழில முட்டைத்தாலி வைக்க கண்ணுல
கற்பூரத்தை வைத்து கட்ட
ஒத்தி பார்த்தவங்க பத்திண்டு போக
முழி அவிஞ்சி மோரா வடிய !

பின்னர் நிற்பவர்கள் அனைவரையும் என்று செய்து கையில் வைத்துள்ள பொருட்களை நெருப்பில் போடுவர் அல்லது வாசலில் முச்சந்தியில் போடுவர்,

நாட்டுப்புற கதைகள் சமூகவியல் உளவியல் மானுடவியல் மருத்துவவியல் தத்துவவியல் அரசியல் பண்பாட்டியல் தர்க்கவியல் இப்படி இன்னும் பல்வேறு துறைகளை உள்ளடக்கிய தாகவோ அல்லது விளக்குவதாகவும் கதைகள் அமைந்துள்ளன என்பார் திரு. நாகலிங்கம்.

நாட்டுப்புற கதைகள் என்பவை நாட்டு வழக்கு சம்பிரதாய சம்பவங்களை உள்ளடக்கியவை காலத்தை அளவுகோலாகக் கொண்டு சமுதாய மாற்றங்களை சமுதாயம் அனுபவித்தது அவற்றை சேமித்து மக்களிடையே காணப்படும் மரபு முறை பண்பாடுகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ தந்து மக்களின் கவலை கலைப் படைப்புகளை திகழ்கின்றனர்.

கலைப்படைப்புகள் மக்களால் உருவாக்கப்பட்டு மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் மக்களால் சொல்லப்பட்டு வருகின்ற கற்பிதங்கள் ஆகும், சரிதங்கள் ஆகும். கதைகள் மிகச் சுருங்கிய வடிவம் பெற்றதாக இல்லாததால் சமுதாயத்தின் பல செய்திகளை ஒரே கதையை இனம் காட்டுகின்றன. சமுதாய செய்திகளை கோடிட்டு காட்டாமல் விரிவாக காட்டும் தன்மை உடையதாக அமைகிறது. செய்திகள் உதிரிகளாக இல்லாமல் தொடர்ந்து பல செய்திகளை வெளிப்படுத்துவதாக உள்ளது கதைகள் மற்றும் உரைநடை வடிவமாக அமைகின்றன உரைநடை வடிவம் எளிய ஒரு வடிவம் தடையற்ற வெளிப்பாட்டுத் தன்மை கொண்டது உண்மைகளை மறைக்காமல் வெளியிடும் தன்மை பெற்றதாக அமைகின்றது.

ஸ்டீபன்சன்-நாட்டுப்புற கதையின் மிக முக்கியமான பண்பு அது மரபு வழியில் வருவது என்பது உண்மை என்கிறார். அதோடு நாட்டுப்புறக்

கதைகள் எல்லாமே ஏதோ ஒரு சிறிய உண்மையை தம்முள் கொண்டுள்ளன என்றும் சொல்கிறார்

**கதை ஒன்று**

''ஒரு ஈக்கு தன் பேரு மறந்து போச்சு ஒரு கண்ணு குட்டி கிட்ட போய் கொழு கொழு கண்ணே என் பேரென்ன என்றல் கண்ணுகுட்டி எனக்கு தெரியாது என் அம்மா கிட்ட போய் கேளு அம்மா கிட்ட போயி என் பெயர் என்ன என்று கேட்டால் பசு எனக்கு தெரியாது என்னை மேய்ப்பவனுக்கு தான் தெரியும் என்றால் எடை இடம் இடையனிடம் சென்று கேட்டல் என் கையிலுள்ள கோழியிடம் கீழ் சென்றது என் கைகள் என் பெயர் என்ன நான் வளர்ந்த கிளியிடம் போய்க் கேள் என்றது கிளியிடம் சென்று கேட்டால் அது எனக்கு தெரியாது நான் வளர்ந்துள்ள நடு மரத்திடம் போய் கேள் என்றது நீயும் மரத்திலும் சென்று கேட்டால் அதற்கு மரம் தன் மேல் அமர்ந்துள்ள இடம் போய்க் கேள் என்றது என்று கேட்டதற்கு தான் பிடித்து தன்னிடம் போய் கேள் என்றது மீண்டும் சென்று கேட்டது மீன் சண்டை பிடிக்கும் வலையை இடம் போய் கேள் என்றது அவளிடம் சென்று கேட்டால் அதற்கு வளையல் நான் முன்வைக்கும் சக்தியிடம் போய்க் கேள் என்றது''

சக்தியுடன் சென்று கேட்டால் அதற்கு சக்தி என்னை செய்யும் கோச் அவனிடம் போய் கேள் என்றது அவர்களிடம் சென்று கேட்டால் அதற்கு அவன் நான் எடுக்கும் மன்னிப்பு கேள் என்றான் மன்னிப்பு கேட்டல் அதற்கு முன் என் மீதி இருக்கும் புலியிடம் கேள் என்றது புலியிடம் சென்று கேட்டால் அதற்குப் பின் என்னை மேயும் குதிரையிடம் போய் கேள் என்றது

ஈசனிடம் சென்று என் பெயர் என்ன என்று கேட்டு அதற்கு குதிரை என்று ஈஈஈஈ கனைத்தது இதன் பெயர் தெரிந்தது என்று கூறி பறந்தது.

சாதி சுயதொழில் கதையிலிருந்து அந்தந்த சாதிக்குரிய தொழில்கள் என்னென்ன என்பது புலனாகிறது இடையர் மாடு மேய்ப்பவர் மீன்பிடித்தல் தொழில் செய்பவராகவும் குயவர் மண்பாண்ட தொழில் செய்பவராகவும் இருப்பது புலனாகிறது மேலும் தெரியாதவற்றை எவரேனும் தெரிந்து கொள்ள முற்பட்டு நம்மை அணுகும் போது நமக்கு தெரியாமல் இருக்கும் நேரத்திலும் தெரியாது என்று கூறிவிட விடை கிடைக்க உதவி செய்யும் பொருட்டு அங்குச் சென்று

அங்கு சென்று கேள் உனக்கு விடை கிடைக்கும் என்று மற்றவர்களிடம் கை காட்டி உதவும் பண்பும் இந்த கதையில் இருந்து தெரியவருகிறது நன்னிலம் வட்டத்தில் உள்ள எல்லா தரப்பு மக்களிடம் இந்த பழக்க வழக்கம் காணப்படுகிறது.

**ராஜா ராணி கதை**

வண்ணான் துணி துவைக்க ஆற்றிற்கு கழுதையுடன் செல்ல மற்றும் துணியில் வெள்ளைபேன் அடிபட்டு இறந்த ரத்தம் துணியில் முதல் துணியை அலசுதல் ரத்தம் காற்றில் மிதத்தல் ரத்தம் தண்ணீரை ஒரு மாடு பிடித்தல் கொம்பு வளைதல் மாட்டு கொம்பில் ஒரு காகம் வந்தமர்ந்தது காகத்தின் கண் பொட்டையாதல்

காகம் பறந்து நெல்லி மரத்தில் அமர்தல் போது அவர்கள் நெல்லி மரம் வேரோடு சாயும் அதன் அருகில் ஒரு பெண் கையில் ஒரு கிண்ணம் கொண்டு கடையில் சாமான்கள் வாங்கி வருதல் - நெல்லிக் காயை பறித்து சாப்பிடுதல் அந்தக் கிண்ணம் அவன் கையில் ஒட்டிக் கொள்ளுதல் கடைக்கு செல்லுதல் கடைக்காரர் அவள் கையில் உள்ள கிண்ணத்தை கேட்டல் அப்போது அந்தப் பெண் ஒரு பேன் செத்து ஊரார் ரத்தம்- மாட்டுக்கொம்பு- கோணல்- காக்கா கண்ணுபட நெல்லி மரம் வேரோடு சாய்க்க இறக்கிவிட்ட கடைக்காரன் குண்டில கட்ட ஒட்ட என்றல்..

அவர் அமர்ந்திருந்த பலகையை அவரோடு ஓட்டுதல் ராத்திரியில் வருதல் கடைக்காரர் ஒரு பேன் செத்து ஒரு ஆறு ராஜா குதிரை ஓட்ட என்றல் குதிரையிலிருந்து ராஜா அவள் எழுந்திருக்க முடியவில்லை அரண்மனைக்குச் செல்ல ராணி என்ன என்று கேட்க ஒரு பேன் செத்து ஒரு ஆறு ராணியும் குதிரையோடு ஒட்ட என்றல்..

ராணியின் குதிரையோடு ஒட்டிக்கொண்டால் இருவரும் குதிரையோடு ஊர் சுற்றிப் பார்த்து

மகிழ்ந்தாள் இந்த கதையில் இருந்து ரத்தம் பற்றிய பயம் மக்களிடம் உள்ளது தெரிய வருகிறது

ஒரு உயிரை கொலை செய்ய அதன் ரத்தம் நம்மை அச்சுறுத்தும் என்ற நம்பிக்கை உலாவுவது தெரிகிறது. மனிதர்கள் விலங்குகளின் ஆன்மாவும் ஆவியும் சுற்றியுள்ள பொருட்களின் மீது வாழ்ந்துவரும் அவை பல எச்சரித்தும் செயல்களை செய்யும் என்றும் நம்பிக்கை கொண்டுள்ளனர் மேலும் துணி வெளுப்பவர் வண்ணார் அவர்களுக்கு வளர்ப்பார் அந்த கழுதை மேல் துணிகளை வைத்து விளக்கை எடுத்துச் செல்வார் என்ற பழக்கவழக்கம் புலனாகின்றது.

குருவி பாயசம் வைத்த கதை ஒரு ராஜா கதை கேட்பதில் பெரியார் கதை கேட்டுக் கொண்டே இருப்பார் ஒரு போட்டி வைத்தான் போதும் என்று சொல்லும் வரை கதை சொல்ல வேண்டும் அப்படி சொல்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என்று தோற்றவர்களுக்கு தண்டனை உண்டு நிறைய பேர் முயற்சித்து தண்டனை பெறுதல் ஒருவன் அவரை வணங்கி உங்களுக்கு பொறுமை பாயசம் வைத்த கதை சொல்கிறேன் என்றாள்

ஒரு குருவி வீட்டிற்கு வந்து விழுந்து நிறைய சமைக்க ஆசைப்படுதல் சமைக்க தெரியாத குருவி ஒரு பாட்டியிடம் பாய் சமைத்து விருந்து கொடுக்க வேண்டும் எப்படி பாயசம் செய்வது என்று கேட்டது மரக்கால் அரிசி ஒரு படி பயறு மூன்று விசில் எல்லாம் இவை எல்லாம் வேண்டும் என்றால் பாட்டி குருவி அரிசி காலநிலை ஒன்று ஒன்றாக சேர்த்தல் இவைகளை வாங்கி தான் நான் பாயசம் வைத்து தருகிறேன் பாட்டி சொல்லல் குருவி பொருட்களை வாங்க காசில்லாமல் ஒரு வீட்டிற்குப் போய் ஒரு நெல்லை எடுத்து வந்து பாட்டி வீட்டில் வைத்தது ராஜா போதும் கதை என்று கூறியவன் இந்த படத்தை பாராட்டி சன்மானம் தேர்தல் இந்த கதையிலிருந்து ராஜா சொன்னதை ஏற்றுக் கொண்டு முடித்தவர்களுக்கு தண்டனை உண்டு என்பதும் விருந்திற்கு பாயசம் உண்டு என்ற பழக்கமும் வைத்திருக்க வேண்டிய பொருட்களும் மேலும் மரக்கால் வீசும் போன்ற அலகுகளும் பழக்கத்தில் உள்ளது தெரிய வருகிறது நெல் குத்துதல் பயறுகள் கூட்டுதல் குறைத்தல் போன்ற பழக்க வழக்கங்களும் உள்ளன என்பதும் தெரிகின்றது மாமியார் வராத மாப்பிள்ளை வீட்டிற்கு வருதல் மாமியார் குளித்துவிட்டு மாப்பிள்ளை வரும் சந்தோஷத்தில் புடவை கட்டிக் கொள்ளாமல் விருந்துக்கு ஏற்பாடு செய்தல் மாப்பிள்ளை மாமியாரின் உடையில்லாத கோலம் பார்த்து அத்தை அதன் மூடுங்க தற்போது மூடுங்க என்றல் மாமியாரோ வீட்டு வாசல் கதவை மூடி மீண்டும் அத்தை அதை மூடுங்க என்று கத்திகொண்டே சொல்லுதல் மாமியாரும் வீட்டில் உள்ள எல்லா பொருட்களையும் மூடுதல் மீண்டும் கத்த அதை மூடுங்கள் என்று வீட்டிற்கு வெளியில் உள்ள கிணற்றையும் மூடுதல் மூடிவிட்டு பழைய சுவைக்க வெள்ளை வாங்க கடைக்கு செல்வதாக கடைக்காரன் வெள்ளை உருண்டை இந்த இரண்டு உருண்டைகள் அடித்து அதை மூடுங்க என்றல் மாமியார் தன் மாமியாரிடம் சென்று என்னை ஏன் நீங்க புடவை கட்ட சொல்லவில்லை என்று கோபித்தல் இந்த கதையில் மாப்பிள்ளை அதிகமாக மாமனார் வீட்டுக்கு வராத வழக்கமும் மாப்பிள்ளைக்கு பாய சமைத்து விருந்து வைக்கும் வழக்கமும் தெரிகிறது மேலும் மாமியார் மருமகள் கோபித்துக் கொண்டது போக மருமகள் மாமியார் ஆகும் பொழுது அவள் தன் மாமியாரிடம் கதையிலிருந்து தெரிகிறது கழுதை வாங்கிய கதை அண்ணன் ஒரு கழுதை வாங்க நினைத்தல் அவரின் பேரன் இருவருமாக கஷ்டப்பட்டு பணம் சேர்த்து கழுதை வாங்க செல்லல் வெளியூர் சென்று கழுதை வாங்கிக் கொண்டு இருவரும் கதையோடு திரும்புதல் கழுதையோடு திரும்புதல் இதனை பார்த்து சிலர் முதியவரை நடத்துறீங்க கழுதை மேல உட்கார்ந்து பொங்கலே என்றல் அவரும் அமருதல் அப்போது இதை பார்த்த சிலர் பாவம் சின்ன பிள்ளையை நடக்க விட்டுட்டு இவர்களது மேலே ஏறி வரும் பாரு என்ற முதியவர் இறங்கி தன் பேரனை கழுதை மீது உட்கார வைத்து அடுத்த ஓரிரு மக்கள் வயசான காலத்துல நீங்களே நடத்துறீங்க என்ற இருவரும் கழுதை மேல் அமர்ந்து செல்ல அடுத்த ஊரில் மக்கள் பாவம் இந்த சிறிய கழுதை மேல ரெண்டு பேரும் உட்கார்ந்து போராடிவரும் மனசுல ஈரம் இல்லை என்றால்

இருவரும் பெரிய கயிறு வாங்கி கழுதையின் முன்னங்கால் இரண்டையும் கட்டி பின்னங்கள் இரண்டையும் கட்டி ஒரு கம்பியை போல் தூக்கி செல்லுதல் இதனைப் பார்த்த சிலர் கழுதை உயிரோடு இருக்கும்போதே செத்த பொணம் அதை தூக்கி விட்டு பாரு பாரு என்று மனம் நொந்து கழுதை ஆற்றில் தூக்கிப் போடுதல் அந்த கழுதையை தன் சொந்த ஊருக்கு செல்லும் வழக்கம் உள்ளது ஊரார் பேசும் அனைத்து பேச்சுக்களையும் அப்படியே எடுக்காமல் திருவள்ளுவரின் எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண வேண்டும் என்பதே சமூக ஏற்படுத்த ஏற்பட்ட கதையாகவே கதை வழங்கி வருகிறது

**நரி வால் அறுத்த கதை**

ஒரு நரி சிங்கத்திடம் இருந்து தப்பும் போது வால் சப்பாத்தி கல்லில் மாற்றுதல் எழுத்து பார்த்தது உயிர் தப்ப வேகமாக ஓட முடியவில்லை வால் அறுந்து ரத்தம் கொட்டியதால் எதிரே மற்றும் நரிகள் வருவது பார்த்து வெட்கப்பட்டு வானத்தை பார்த்து அமர்தல் கடவுள் தெரியவில்லை என்று சொல்லிக் கொள்ள முடியாமல் வெட்கப்படுதல் அந்தக் காட்டிலுள்ள நரிகளை அனைத்தும் கடவுளை காண வேண்டி வாழை பெற்றுக்கொள்ளுதல் அந்த காட்டில் ஒரு தலைமுறையினருக்கு வாழை இல்லை இதிலிருந்து மனிதப் பிறவியே எல்லா பிறவிகளிலும் உயர்ந்தது அவனால் மட்டுமே கடவுளை அடைய முடியும் என்பதை அறியமுடிகிறது மற்றவர்கள் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடாது மேலும் எதையும் ஆராயாமல் எந்த செயலிலும் இறங்க கூடாது என்ற நீதியை புகட்டுகிறது விடுகதைகள் விடுகதை என்பது விடுவிக்கப்பட வேண்டிய வினா இது சாதாரணமான நேரடியாக புரிந்து கொள்ள கூடிய பேச்சு மொழியில் இருந்து வேறுபட்டது விடையையும் விடைகாண உப்பு சொல்லையும் தனக்குள் உள்ளடக்கியது மொழியில் கணிசமான அர்ஜுனனுடைய இருவர் பேசும் போது கூட ஒருவர் பேசுவதை இன்னொருவர் புரிந்து கொள்ள முடியாமல் போவதற்கு அவர்களிடையே பொருள் ஒப்பு இல்லாமையும் உரையாடல் சூழ்நிலையை புரிந்து கொள்ளாமல் காரணங்களாகக் கூறலாம் விடுகதை என்பது சாதாரண உரையாடலை விட புதிர் தன்மை நிறைந்தது நேரடியாக பொருள் கொள்ள முடியாமல் மயக்கம் தரக்கூடிய மறைபொருளை உள்ளடக்கிய மொழி அமைப்பை கொண்டது விடுகதை கட்டுபவர் ஒளி நிலையில் பல்வேறு நிலைகளில் மொழியைப் பயன்படுத்தி மயக்கத்தை ஏற்படுத்துகிறார் கனமழையால் அதற்கு அவரது அனுபவ அறிவும் பண்பாடும் பயன்பாடும் முக்கிய காரணமாகின்றன அவரது அனுபவத்தில் சேகரிக்கப்பட்டு உள்ள இணைய சாயல்கள் அவருக்கு விடுகதைகளை கட்டமைக்க தூண்டுகோலாய் இருக்கின்றன இவை மொழி கிடங்கு என்று கூறக்கூடிய சமூகத்தின் மனதில் பதிந்து கிடக்கின்றன தேவையின் அடிப்படையில் அவை தேடி எடுக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன நன்னிலம் வட்டத்தில் சேகரிக்கப்பட்ட விடுகதைகளை இயற்கைப் பொருளை கொண்டு கட்டப்பட்ட விடுகதைகள் செயற்கை பொருட்களை கொண்டு கட்டப்பட்ட விடுகதைகள் என பிரிக்கலாம் இயற்கைப் பொருட்களைக் கொண்டு கட்டப்பட்ட விடுகதைகள் அல்ல முடியும் கிள்ள முடியாது தண்ணீர் வழிந்து வழிந்து போவான் பாம்பும் அல்ல வழிநெடுக நீர் தருவேன் மறையும் நல்ல காடுமலை சுற்றி வருவேன் காராம் பசுவும் அல்ல கடலிலேயே மூழ்கிவிடுவேன் மீண்டும் அல்ல ஆறு வெள்ளையாய் இருப்பான் தண்ணீர் குடிப்பான் கருப்பாய் மற்றவர் தாகம் தீர்ப்பான் மேகமலை நீலப்பட்டு காரி நிலையில்லா புகாரி ஊருக்கு உதவும் பாரி ஒளியும் வேண்டும் மாறி வானம் மேகம் மழை ஆத்துக்கு அக்கரையிலே தோப்புக்குள்ளே உறவுகளே காய்ச்சல் ஆயிரங்கால் அந்த காயப்படுத்தி கணக்கிட பேருக்கு காவிரி கொண்ட பணம் நட்சத்திரம் பால் இல்லாமல் வருகிறது நோயில்லாமல் இளைக்கிறது நிலா பகலில் வாழும் அண்ணனுக்கு பக்கத்தில் யாரும் இல்லை இரவில் வாழும் தங்கைக்கு இருப்பதோ சென்னையில் அங்கத்தவர்கள் சூரியன் நிலா நட்சத்திரம் திரி இல்லாத விளக்கு பெரிய லோகம் தெரியுமா சூரியன் ஓடுவான் இருக்கமாட்டான் அவன் திரும்பி வருவான் வருவான் எங்க வீட்டு கேணியில் வெள்ளிக் கிண்ணம்

மிதக்குது நிலா எட்டாத தூரத்தில் எழிலான பெண்ணொருத்தி இருக்கிறாள் நிலா எட்டாத உயரத்தில் எண்ணிலடங்கா பூக்கள் நட்சத்திரம் யாரும் ஏற முடியாத உயரத்தில் ஆயிரம் பூக்கள் நட்சத்திரம் யாரும் ஏற முடியாத உயரத்தில் அழகழகாய் ஆயிரம் பூக்கள் நட்சத்திரம் விடிய விடிய பூந்தோட்டம் விடிந்து பார்த்தால் விருந்து ஒட்டச்சத்திரம் தினமும் கிழக்கில் இருந்து மேற்கே ஒரு பயணம் சூரியன் நீல நிற செடியிலே கோடி மலர் பூத்திருக்கு நட்சத்திரம் நடுவினிலே ஒருத்தி சிரிக்க 4000 பேர் கூடியிருக்க விடியும் பொழுதில் விளங்கிச் என்றால் நிலா நட்சத்திரம் பகலில் முடிப்பவன் ஒருவன் இறைவனை முடிப்பார் பலபேர் சூரியன் நட்சத்திரங்கள் எங்கள் வீட்டு கொல்லையிலே பச்சை நோன்பு கொஞ்ச நாடுகிறது எங்க வீட்டு கொல்லையில யான படுத்திருக்கு பூசணிக்காய் கண்டு காய் காய்க்கும் காணாமல் பூ பூக்கும் அத்திமர பூ பூக்கும் காணாமல் காய் காய்க்கும் வேர்க்கடலை பிறப்பால் வளர்ந்தவள் புகுந்த இடம் போவாள் சூழ் கொள்ளுவாள் ஆடி வருவாள் எல்லோரும் பசி தீர்ப்பார் நெற்கதிர் அப்பன் சூரியன் ஆயிசா நான் சக்கரகட்டி பலாப்பழம் ஆழக் குழி வெட்டி அதில் ஒரு முட்டை இட்டு அண்ணார்ந்து பார்த்தால் 96 முட்டைகள் தேங்காய்.

**தண்ணீரில் ஓர் வான் தாகம் தீர்க்க தண்ணீர் பருகுவான்**

பெரும்பாலும் வானத்தில் நாம் காணும் நிலா சூரியன் நட்சத்திரங்கள் போன்ற இயற்கை விடுகதையின் விடையாக வைத்து விடுகதை எண்ணுகின்றனர் விடுகதை கட்டுப் அவரின் முக பாவனைகளை நன்கு உற்று நோக்கினால் இறுதியில் விடைகளை கண்டுபிடித்துவிடலாம் செயற்கைப் பொருட்களை கொண்டு கட்டப்பட்ட விடுகதைகள் அடித்து நொறுக்கி அனலில் போட்டாள் ஆவியாய் வெளிவருமா அழகாய் சாம்பிராணி நடக்க தெரியாது உன் நட்பு ஓனருக்கு வழி காட்டுகிறான் கைகாட்டி தோகை மயில்கள் தோகை மயில் ஆனால் தோட்டியின் கையால் தொல்லை படுவாள் விளக்கமாறு மூடாத வாய்க்கு மூல வால் அகப்பை காட்டு நடுவில் ஒரு ரோடு தலை வகிடு கோயிலை சுற்றி கருப்பு கோவிலுக்குள்ளே வெளுப்பு போட்டு பானை பலர் சேர்ந்து கட்டிய வீடு ஒருவர் கண்பட்டு உடைந்தது கருப்பு சட்டைக்காரன் காவலுக்கு கெட்டிக்காரன் கடகட குடுகுடு நடுவில் பள்ளம் வானிலை பூத்திருக்கும் பூவுமல்ல பாசம் இல்லாமல் காத்திருக்கும் மட்டுமல்ல கோலம் தடுக்கு போட்டின் எடுக்க முடியல இயற்கைப் பொருட்கள் விடையாக வரும் விடுகதைகளை எழுதியது விடுவித்து விடுகின்றனர் செயற்கைப் பொருட்களால் கட்டப்படும் விடுகதைகளை விடுவிப்பதில் சிறிது சிரமம் ஏற்படுகிறது சில பொருட்களின் குணங்களை கூறி விடை பெறுகின்றனர் விடைகள் தெரியாத நிலையில் விடைகளை நேரடியாக கூறாமல் துப்புக் கூறி விடை பெற வைக்கின்றனர் படிப்பவர்களுக்கு விடுகதைகளை வழிவழியாக கேட்டு துடிக்கின்றனர் அதிகமாக பெரியவர்கள் விடுகதை தடுத்து சிறியவர்களை விடை கூறுகின்றனர் இயற்கை பொருட்களை விடையாக கொண்டே அதிகமாக விடுகதை தொழுகின்றனர் விடுகதைகள் குழந்தைகளின் அறிவை உறுதிப்படுத்துகிறது ஆழ்ந்த சிந்தனையை தூண்டுகிறது தம்மைச் சுற்றி உள்ள பொருட்களின் பயன்பாடுகளையும் அவற்றின் செயல்களையும் குழந்தைகளுக்கு மறைமுகமாக புரிய வைக்கின்றன.

**மனிதனோடு ஒப்பிட்டு கூறுதல்**

மனிதனை தெய்வத்தோடு ஒப்பிட்டு நிறுத்தாமல் மனிதனோடும் ஒப்புமை படுத்தி பழமொழி கூறுகிறது வழக்கமாக உள்ளது அவசரப்பட்டு நிலையான பாதுகாப்பு இழக்கும் அவசர முடிவை அரசனை நம்பி புருஷனை கைவிட்ட நாம் என்றும் தாயை எப்படியோ அப்படியே குழந்தைகள் என்பதே தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை என்றும் தனக்கு தெரியாத போது வேறு ஏதேனும் ஒன்றின் மீது குறை கூறுதல் ஆடத்தெரியாத தேவடியாளுக்கு கோணல் என்றாளாம் என்றும் புகையே விரித்தாள் காரம் போய்விடும் என்றாலும் என்றும் புகையிலையை வைத்தால் காரம் போய்விடும் பெண் சிரித்தால் அவள் ஒரு மாதிரியான வலி என்று எண்ணி விடுவர் இதனை பொம்பள சிரிச்சா போச்சு

புகையிலை விரிச்சா போச்சு என்றும் கூறுவர் தவறான விளைவைத் தரும் செயல்களை செய்யாதே என்பது சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என்றும் பருவத்தில் பயிர் செய்ய வேண்டும் என்பதே ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்குமா என்பது படித்தவன் தவறு செய்தால் கூடாது என்பதே எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான் படித்தவன் பாட்டைக் கெடுத்தான் என்பர் ஆடிய காலும் பாடிய வாயும் சும்மா இருக்காது சொந்தக்காரர்களுக்கு என்பர் மேலும் உழுதவன் கணக்கு பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது பணமும் பத்தாய் இருக்கணும் பொண்ணு முத்தா இருக்கணும் ஒருவர் புடவையை இருவர் கட்டினா இருவரும் அம்மணம் இரட்டை பொண்டாட்டிக்காரன் விக்டர் எடுத்தானாம் டெல்லிக்கு ராஜான்னாலும் தாய்க்கு பிள்ளை தானே குறத்தி புள்ள பெத்தா குறவன் காயம் தன்னானா அடுத்த வீட்டு நெய்யே என் பொண்டாட்டி கையே காத்திருந்தவன் பொண்டாட்டியை நேத்து வந்தவன் கொண்டு போன மாதிரி ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே ஊர் ஊராய் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் உடையவன் இல்லேனா ஒரு முழம் கட்டை மக 8 சாது மிரண்டால் காடு கொள்ளாது பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடும் என்பன போன்ற பழமொழிகளைப் பயன்படுத்துகின்றனர் இந்த பழமொழிகள் யாவும் மக்கள் செய்யவேண்டிய செயல்களை நல்ல முறையில் செய்ய சொல்லி நேரமும் எதிர்மறையாகவும் தூண்டுதல் ஆகும்.

தாவரங்களோடு ஒப்பிட்டுக் கூறுதல் தாவரங்களும் நாட்டுப்புற மக்கள் வாழ்வில் மிக முக்கிய இடம் பெறுகின்றது என்பதை அவர்கள் பயன்படுத்தும் பழமொழி மூலம் அறியலாம் துன்பத்தைத் தாங்கும் மனம் வேண்டும் என்பதே பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளிய மரத்துல ஏறி ஆகணும் உழைப்பின்றி ஊதியம் இல்லை என்பதே ஆடியில் விதைக்காமல் கையில் அறுவடை செய்ய முடியுமா என்றும் மேலும் அரச மரத்தை சுற்றி வந்து அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்தது போல் என்பன போன்ற பழமொழிகளை பயன்படுத்துகின்றனர் உணவுப் பொருட்களோடு ஒப்பிட்டு கூறுதல் உணவுப்பொருட்கள் மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது என்பதை கீழ்கண்ட பழமொழிகள் மூலம் அறியலாம் தலைக்கு மேலே வெள்ளம் போனால் சான் என்ன முழம் என்ன என்பதை தலைக்குமேலே கடன் அடிப்படையில் பொறிக்க சொன்னானாம் எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பதை கேழ்வரகில் நெய் வடிகிறது உனக்கு புத்தி இல்லையா என்றும் நேரம் தவறாமை வெற்றிக்கு வழி விடும் என்பதை ஆறின கஞ்சி பழங்கஞ்சி என்றும் உன் தோற்று கடனை அன்னம் இட்ட வீட்டில் கன்னம் வைக்காதே மற்றயவை மற்றவை என்பதில் மனித வாழ்வில் பயன்படும் மற்ற பொருட்களைக் கொண்டும் பழமொழிகளை பயன்படுத்துவதே கூறலாம் செயலில் துணிந்து பின் பின்வாங்கக் கூடாது என்பதை உரலில் தலையை எடுத்துவிட்டு கொடுத்துவிட்டு குளத்திற்கு பயப்படலாமா என்றும் சிலருக்கு பணிவு வேண்டும் என்பதே மற்றும் அற்பத்துக்கு பசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்

அறிவுள்ளவர்கள் தன் நிலையிலிருந்து பிறழ மாட்டார்கள் என்பதே நிறைகுடம் தளும்பாது குறைகுடம் தளும்பும் என்றும் கூறுவர் மேலும் முன்னேற செயல்பட்டாலும் சேலையில் முள் பட்டாலும் சேதம் சேலைதான் பஞ்சும் நெருப்பும் பக்கத்தில் இருந்தால் பத்தி கொள்ளாமல் இருக்குமா ஊசி இடம் கொடுத்தால் தான் நுழைய முடியும் ஒழிந்த நேரத்தில் அவிசாரி போனா உப்பு புளிப்பு ஆகும் ஒரு கண்ணில் வெண்ணெய் மறு கண்ணில் சுண்ணாம்பு மந்திரத்தால் மாங்காய் வராது சுத்தி பார்க்காத பயிரும் கத்தி கேட்காத கடனும் கூடி வராது தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே குச்சியில் குறுமிளகு பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும் உன் சொல்லில் உப்பும் இல்லை புளிப்பும் இல்லை தந்தையும் இல்லை பாப்பாத்தி அம்மா மாடு வந்தது கட்டினா கட்டு கட்டா போ வச்சா குடுமி சிரைத்தால் மொட்டை என்றும் ஏடாகூடமாக செய்வது தை பிறந்தால் வழி பிறக்கும் ஏணி மடை நா நுனி மடையனா இப்படி தம்மைச் சுற்றியுள்ள

பொருட்களைக் கொண்டு பல மொழிகள் கூறி வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் தாமே செம்மைப்படுத்திக் கொண்டு மற்றவர்களையும் நெறிப்படுத்த முற்படுவது நன்னிலம் வட்டார மக்களின் பழக்கமாக உள்ளது.

**மந்திரங்கள்**

காப்பியங்களில் மந்திரங்கள் இடம்பெற்றுள்ளது போலவே கதை பாடல்களிலும் மந்திரங்கள் இடம்பெற்றுள்ளன விரை இவற்றிற்கு முந்திய கதைப்பாடலில் மந்திர முக்கிய இடம் வகித்தது என்றும் அதையே தலைவன் மந்திர சக்திகளைக் நான்கு அறிந்தவனாகவும் இயற்கை நிகழ்ந்த ஆற்றலை கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றவனாக விளங்கினான் என்று சீமரா குறிப்பிடுகின்றார்

இந்திரஜாலம் மந்திரஜாலம் இன்பமாய் கற்க வைத்தார் கூடு விட்டு கூடு பாய கூடி வித்தை கற்க வைத்தார் கோகரணம் கஜகர்ணம் கொம்பனை யார் கற்பித்தார் என்று வரும் அடிகளால் காத்தவராயன் கொல்லிமலை கன்னியர் இடம்பெற்ற மந்திரம் வெளிப்படுத்துகிறது காத்தவராயன் நாடகம் தமிழகத்தில் மாவட்டந்தோறும் கதைப்பாடல்கள் தோன்றியிருக்கின்றன காத்தவராயன் கதை திருச்சி மாவட்டத்தில் தோன்றியது காத்தவராயன் காவல் புரிபவன் என்கிறது அகராதி கிராமங்களின் எல்லை தெய்வமாக இருந்து காவல் புரிந்து வருபவன் என்கிற என்கின்றனர் ஆரியமாலா பூமி எனும் இரு மனைவியருடன் மாரியம்மன் சன்னதியில் உள்ளவன் என்றும் கூறுகின்றனர் பாண்டவர்கள் வனவாசத்தை போலவே பல உட்பிரிவுகள் கொண்டே நீண்ட கதையை பாடல் காத்தவராயன் கதை 178 பக்கம் கொண்ட நூலினை பிறப்புகளும் ஆயிரம் என்ற தலைப்பில் கூறப்படுகின்றன.

இதில் 12 வணங்கியுள்ளனர் 13வது வனம் காத்தவராயன் கழுகு மரம் ஏறுதல் கதைப் பாடலில் வரும் என்ற சொல் பாமர மக்களை கவர்ந்து இருக்கலாம் என்பதும் கதை பிரிவு என்பது போன்ற உணர்வு ஏற்பட்டிருக்க வேண்டும் ஆகையினால்தான் காத்தவராய சுவாமி கதையில் உட்பிரிவுகள் பணம் என்ற பெயரால் அழைக்கப்பட்டு உள்ளன என்கின்றனர் ஆனா பெருமாள் காத்தவராயன் கதை பாடலில் அறக்கருத்துகள் பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை அனைவரும் சமம் கடவுளிடம் பக்தி கொண்டவர்கள் ஒருபோதும் தாழ்வு இல்லை ஏழைகளுக்கு கொடுப்பது ஒன்பது உயிர் கொடுப்பதற்கு சமம் போன்ற தத்துவங்களை கதை முழுவதும் எடுத்துக் கூறுகின்றனர்

புராணங்கள் புராணங்களும் இதிகாசங்களும் மக்கள் மனதை மிகுதியாக வருகின்றன ஒரு தனி மனிதனின் நிறைவேறாத ஆசைகள் கனவுகள் ஆகவும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் நிறைவேறாத ஆசைகள் புராணங்கள் வெளிப்படுகின்றன என்று உளவியல் அறிஞர்கள் குறிப்பிடுவர் புராணங்களில் வரும் கதாபாத்திரங்கள் மக்கள் வாழ்க்கையோடு ஒன்றாக கலந்து இருக்கின்றன ராமாயணம் மகாபாரதம் முதலிய கதைகளும் அவற்றிலுள்ள கிளைக்கதைகளும் கோயில்களில் திருவிழா நாட்களிலும் மற்ற சில முக்கியமான நாட்களிலும் கூறப்படுகின்றன நாட்டுப்புறக்கதைகள் மனிதன் விலங்குகள் பறவைகள் பற்றிய புராணங்கள் கடவுளைப் பற்றி எது நன்னிலம் வட்டத்தில் கோயிலும் மற்றும் தெருக்கள் கூடும் இடங்களிலும் ஊர் பெரியவர் வீட்டு திண்ணையிலும் படிக்கப்படும் புராணங்களை பற்றி அறியலாம் ராமாயணம் வால்மீகியால் வட மொழியில் எழுதப்பட்டது கம்பரால் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளது ஆயிரம் படிப்பறிவில் ஓங்கி விளங்காத நாட்டுப்புற மக்கள் ராமாயணத்தை வழிவழியாக தங்களுக்கு உரிய நடையில் கோயிலில் கூறுகின்றனர்.

**முடிவுரை:**

நாட்டுப்புற மக்களுக்கு உரிய சிறப்புத் தன்மைகள் புலப்படுகின்றன நாட்டுப்புற பாடல்கள் அங்குள்ள சில பள்ளிகளில் கற்றுத் தரப்படுவது நாட்டுப்புற பாடல்கள் ஏற்பட்டதற்கு அத்தாட்சியாக உள்ளது. தொழிற் பாடல்கள் தாலாட்டு பாடல்கள் பக்தி பாடல்கள் சிறுவர்களிடையே பாடப்படுவது

இந்த நாட்டுப்புறத்தில் சிறப்பு பெரியவர்கள் கதைசொல்லி சிறுவர்கள் கேட்கும் காலத்தில் சிறுவர்கள் கதைகள் சொல்லும் அளவிற்கு உள்ளனர் வட்டார மக்கள் தங்கள் இலக்கியங்களை வழிவழியாக கட்டிக்காப்பது இதிலிருந்து புலனாகிறது கதைப் பாடல்களை வட்டார மக்களால் அதிகம் விரும்பப்படுகின்றன கதையை முழுமையாக தெரியாவிடினும் கதையின் முக்கிய பாத்திரங்கள் முக்கிய சம்பவங்கள் பல பாடல்கள் இவர்களை அதிகம் கவர்ந்துள்ளன பழமொழிகள் மனித வாழ்வினை நெறிப்படுத்த பயன்படும் பாதை வழிகாட்டிகள் வட்டார மக்கள் காலை கண்விழித்து முதல் இரவு தூங்கப் போகும் வரை எல்லா நிலைகளிலும் பழமொழிகளை பயன்படுத்துவதிலிருந்து நெறிப்பட்ட வாழ்க்கை வாழத் தலைப்படும் வெளிப்படுத்துகிறது கதைப்பாடல்கள் புராணங்கள் மக்களிடம் நன்மைகளைக் கூறி அவற்றைப் பின்பற்ற சொல்லும் உத்தியை அமைகிறது நன்மை செய்தால் நன்மை விளையும் தீமை செய்தால் கட்டாயம் துன்பம் வரும் என்பதை மக்கள் மனதில் புகுத்தி நன்மை செய்வதே புராணங்களின் நோக்கமாக உள்ளன.

**துணை நூற்பட்டில்**


1. **ராஜன்.ஏ.மு,** நாட்டுப்புறப்பாடல்களில் பொருளாதாரம்
2. **அந்தோணிராஜன் அழகரசன்,** நாட்டுப்புறபாடலும்பண்பாடும்
3. Alandundes Oral Literature cultural anthropology
4. **அறவாணன் க.ப** கவிதையில் உயிருள்ளம் உடல்
5. **குணசேகரன்.கே.ஏ,** நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்
6. **ராமநாதன் நாட்டுப்புற பாடல்கள்** காட்டும் தமிழர் வாழ்வியல் 3-4
7. **சு.சண்முகசுந்தரம்** திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப்பாடல்களில் சமுதாய அமைப்பு
8. **சு.சக்திவேல்** நாட்டுப்புறவியல் ஆய்வு
9. **கலைக்களஞ்சியம்** தொகுதி 6 383
10. **வசந்தா ஜீ.** தஞ்சை மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள்
11. ஒரு சமுதாய ஆய்வு **எடுத்தாண்டது செ.**அன்னகாமு ஏட்டில்எழுதாக் கவிதைகள்
12. **அய்யாசாமி.ஆர்.,** (தொகுப்பாசிரியர்) குழந்தைகளுக்கு நாடோடிப் பாடல்கள், அருணோதயம் சென்னை ,1959.
13. **அருணாச்சலம் மு.** காற்றில் மிதந்த கவிதை, சக்தி காரியாலயம் மதுரை1943.,
14. **அழகப்பன் ஆறு.,** நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு-தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் சென்னை-1973
15. **அன்னகாமு** ஏட்டில் எழுதாக் கவிதைகள்., தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் சென்னை-1.1966
16. **இராமநாதன்** ஆறு தமிழில் புதிர்கள்-ஓர் ஆய்வு ,சமுதாய சிற்பிகள் வெளியீட்டகம் மஞ்சக்கொல்லை அஞ்சல் புவனகிரி-608601
17. **கிருஷ்ணசாமி க.,** கொங்கு நாட்டுப்புறப்பாடல்கள் மக்கள் வெளியீடு சென்னை-2.,1978
18. **குழந்தை,** தொடையதிகாரம்., பாரிநிலையம். சென்னை -1,1967
19. **சண்முகசுந்தரம்,ச.வே..** (பதிப்பாசிரியர்) நாட்டுப்புற இயல் ஆய்வு
20. **ஓர் அறிமுகம்** இலக்கிய மாணவர் வெளியீடு சென்னை-1975
21. **சுப்பிரமணியன் சா.வே** (பதிப்பாசிரியர்) தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு உலக தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை-1979.
22. **தேவநேயன் ஞா.,** தமிழ்நாட்டு விளையாட்டுகள் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் சென்னை-1962
23. **பவணந்தி நன்னூல் (காண்டிகையுரை)** தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் சென்னை-1970
24. **வானமாமலை (பதிப்பாசிரியர்)** தமிழர் நாட்டுப்பாடல்கள் நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் சென்னை-1978
25. **கண்ணதாசன்** நாட்டுப்புற மற்றும் சமூக இசை பாடல்கள் வானதி பதிப்பகம் சென்னை -1 1979